3001

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## ( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக : 4 × 2 = 8

1. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை ?

2. 'வன்மையுள் வன்மை' என எதனை வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார் ?

3. வீரமாமுனிவரின் மொழி பெயர்ப்புப் பணியை விளக்குக.

4. குமர குருபரர் பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.

5. பாரதிதாசனார் 'நாடெங்கும் புத்தகசாலை வேண்டும்' என்பதன் காரணம் யாது ?

6. 'சின்னச் சீறா' விளக்குக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : $3 \times 4 = 12$

7. 'இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக் கொள்ளல் வேண்டும்' என நாமக்கல் கவிஞர் கூறுகிறார் ?

8. நற்றிணை – குறிப்பு வரைக.

9. வள்ளுவர் வினைத்திட்பத்திற்குத் தரும் விளக்கம் யாது ?

10. அனுமன் சீதைக்குச் சொல்லிய செய்திகள் யாவை ?

11. தாவீதன் கோலியாத்துக்கு உரைத்த மறுமொழி யாது ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: $3 \times 4 = 12$

12. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

14. உலாவில் இராசராசனின் வில், வாள் குறித்துக் கூறப்பட்டன யாவை ?

15. 'மானிடன் மண்புழுவல்ல' என்பதற்குத் தாராபாரதி கூறும் காரணம் யாது ?

16. 'நாயினேன் மறந்து என்னினைக் கேனே' என்று சுந்தரர் உருகு மாற்றினை விளக்குக.

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. $1 \times 8 = 8$

17. 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. மருண் மாலைப் போதில் கண்ணகி இனைந்து ஏங்கி உரைத்தனவற்றையும் கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் செய்யுளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. ''வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே''

அ) இஃது யார் கூற்று ?

ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

இ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

ஈ) 'அஞ்சிலோதி' எனக் குறிக்கப்படுபவர் யார் ?

*அல்லது*

21. ''அண்டர்நாயக இனித்துறத்தி, ஐயமும்
பண்டுள் துயரும்''

அ) இதனைக் கூறியவர் யார் ?

ஆ) அண்டர் நாயகன் யார் ?

இ) இவ்வடி இடம் பெற்ற நூலின் பெயர் யாது ?

ஈ) பண்டுள துயரமும் ஐயமும் யாவை ?

VI. 22. 'நண்ணு மிளமைப் பருவத்திலே' எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. ''எழுமை'' எனத் தொடங்கும் குறட்பாவையும் ''அரண்'' என முடியும் குறட்பாவையும் அடி மாறாமல் எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் *இரண்டு* சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) விடுவார் ஆ) வாழ்த்துவம் இ) நிற்கின்றார்

ஈ) புக்கேன் உ) இழந்த ஊ) அறியாய்.

25. கீழ்க்கோடிட்ட தொடர்களுள் ஏதேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. $3 \times 2 = 6$

அ) திருந்து மொழி    ஆ) நல்லாற்றுப் படூஉம்

இ) கயன்முள்    ஈ) சுமைசுமை யாய்

உ) வையகமும் வானகமும்    ஊ) உணர்மின்.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. $2 \times 2 = 4$

அ) பகலுறை    ஆ) அன்புடை    இ) விளக்கேற்றி

ஈ) பூங்கொடியாள்    உ) காற்சிலம்பு    ஊ) பெண்ணரசு.

27. பின்வருவனவற்றிற்கு சான்று தந்து விளக்குக. $1 \times 4 = 4$

குறிஞ்சித் திணை அல்லது பொதுவியல் திணை

28. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை $1 \times 4 = 4$

இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

***அல்லது***

''சொற்பொருட் பின்வருநிலையணி'' *அல்லது* எடுத்துக்காட்டு உவமையணியை விளக்குக.

VIII. பொருத்துக : $4 \times 1 = 4$

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. மணிமேகலை | — | கிருஷ்ணப் பிள்ளை |
| 30. தேவாரம் | — | உமறுப் புலவர் |
| 31. சீறாப்புராணம் | — | சீத்தலைச்சாத்தனார் |
| 32. இரட்சணிய யாத்திரீகம் | — | சுந்தரர் |
| | — | குணங்குடி மஸ்தான். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. கம்பரை ஆதரித்தவர்

அ) வள்ளல் சீதக்காதி

ஆ) சடையப்ப வள்ளல்

இ) சங்கர வள்ளல்.

34. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல்

அ) அகநானூறு

ஆ) ஐங்குறுநூறு

இ) புறநானூறு.

35. அகநானூறு மணி மிடைபவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100

ஆ) 120

இ) 180.

36. "வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே

புகழ் வையகமே" எனப் பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) கவிமணி

இ) பாரதியார்.

37. வரி என்பது .................... வகையது

அ) சந்தப்பாடல்

ஆ) இசைப்பாடல்

இ) கலிப்பாடல்.

38. சீதாப்பிராட்டி தன்னை மீட்டுச் செல்ல வேண்டி விதித்த காலம்

அ) ஒரு திங்கள்

ஆ) ஓராண்டு

இ) ஒரு நாள்.

39. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) சதுரகராதி

ஆ) பேரகராதி

இ) அரும்பத அகராதி.

40. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ) கலம்பகம்

ஆ) பள்ளு

இ) உலா.

41. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்

அ) தேன் மழை

ஆ) குயில்

இ) தென்றல்.

42. வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி

ஆ) வியாசர்

இ) காளிதாசர்.

43. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

அ) நகைச்சுவை நூல்

ஆ) நன்கு கட்டப்பட்டது

இ) அறிவுரை.

44. உத்தர காண்டத்தைப் பாடியவர்

அ) ஒட்டக் கூத்தர்

ஆ) வான்மீகி

இ) புகழேந்திப் புலவர்.

45. கபிலரை 'வாய்மொழிக் கபிலர்' எனப் போற்றியவர்

அ) நக்கீரர்

ஆ) பெருங்குன்றூர்க்கிழார்

இ) மாறோக்கத்து நப்பசலையார்.

46. கொண்டாடப் பெறும் திருவள்ளுவராண்டின்படி திருவள்ளுவர் காலம்

அ) கி.மு. 18

ஆ) கி.பி. 31

இ) கி.மு. 31.

47. 'பாரதி' என்னும் சொல்லின் பொருள்

அ) தேரோட்டி

ஆ) கவிஞன்

இ) கலைமகள்.

48. 'இமயம் எங்கள் காலடியில்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலின் ஆசிரியர்

அ) தாரா பாரதி

ஆ) வாணிதாசன்

இ) ஆலந்தூர் கோ.மோகனரங்கன்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. மறவற்க ................ கேண்மை துறவற்க

துன்பத்துள் ................ நட்பு.

50. எண்பொருள வாகச் ................ தான் பிறர்வாய்

நுண் பொருள் ................ தறிவு.